சுருக்கம்

பதிவுத்துறை – அறிவிப்புகள் – பதிவுத்துறையில் கடந்த காலங்களில் நடந்த பதிவு முறைகேடுகள் தொடர்பாக விசாரிக்க சிறப்பு புலனாய்வு குழு அமைத்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

வணிகவரி மற்றும் பதிவு(ஜே2)த் துறை

அரசாணை (நிலை) எண்.174

நாள் : 15.12.2021
பிலவ, கார்த்திகை – 29
திருவள்ளுவர் ஆண்டு – 2052

படிக்க:

பதிவுத்துறைத் தலைவரின் கடித எண். 35084/ஆர் 3/2021, நாள் 21.09.2021.

*******

ஆணை:

06.09.2021 அன்று சட்டமன்றப் பேரவையில் 2021–22–ஆம் ஆண்டு மானியக் கோரிக்கை எண்.11, முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு விவாதத்தின் போது மாண்புமிகு அமைச்சர், வணிகவரி மற்றும் பதிவு அவர்கள் ஏனையவற்றுடன் கீழ்கண்ட அறிவிப்பையும் வெளியிட்டார்கள்:–

*"பதிவுத் துறையில் கடந்த காலங்களில் நடந்த பதிவு முறைகேடுகள் தொடர்பாக விசாரிக்க சிறப்பு புலனாய்வுக் குழு அமைக்கப்படும்.*

*பதிவுத் துறையில் கடந்த காலங்களில் நடைபெற்றுள்ள பதிவு தவறுகள் குறித்து முழுமையாக ஆய்வு மேற்கொண்டு, போலியாக பதிவு செய்யப்பட்ட மற்றும் அரசுக்கு வருவாய் இழப்பு ஏற்பட்ட இனங்களைக் கண்டறிந்து அறிக்கை அளிப்பதற்காக, ஒரு சிறப்பு புலனாய்வுக் குழு ஏற்படுத்தப்படும். இக்குழுவின் அறிக்கையின் அடிப்படையில் பதிவு தவறுகள் சரி செய்யப்பட்டு, தவறு செய்தவர்கள் மீது சட்ட பூர்வ மற்றும் குற்றவியல் நடவடிக்கைகள் தொடரப்படும்.*

*2021–2022ஆம் நிதியாண்டில் இதற்கான தொடரா செலவினம் ரூ.80 இலட்சம் மற்றும் தொடர் செலவினம் ஆண்டொன்றுக்கு ரூ.2.20 கோடி ஆகும்"*

2. மேற்சொன்ன அறிவிப்பிற்கிணங்க, பதிவுத்துறை தலைவர் அவர்கள் மேலே படிக்கப்பட்ட தனது 21.09.2021 நாளிட்ட கடிதத்தில் கடந்த காலங்களில் நடந்த பதிவுகளில் போலி ஆவணப்பதிவுகள் மற்றும் அரசுக்கு வருவாய் இழப்பு ஏற்படுத்திய பதிவுகளைக் கண்டறிந்து அறிக்கை அளிக்கவும் அதன் அடிப்படையில் பதிவு தவறுகளை சரி செய்யும் நடைமுறைகளை பரிந்துரைக்கும் பொருட்டும் சிறப்பு புலனாய்வுக் குழு ஒன்றினை அமைப்பதற்கான கருத்துருவை அரசுக்கு அனுப்பியுள்ளார்.

3. பதிவுத்துறை தலைவரின் மேற்கண்ட கருத்துருவினை நன்கு கவனமாக ஆய்வு செய்தபின், பதிவுத்துறையில் கடந்த காலங்களில் நிகழ்ந்த பதிவுகளில் போலி ஆவணப்பதிவு மற்றும் அரசுக்கு வருவாய் இழப்பு ஏற்படுத்திய ஆவணப்பதிவு ஆகிய பதிவுத் தவறுகளைக் கண்டறிந்து அறிக்கை அளிக்கவும் அதன் அடிப்படையில் எதிர்காலத்தில் பதிவுத் தவறுகளை தவிர்க்கும் நடைமுறைகளை அரசுக்கு பரிந்துரைக்கும் வகையிலும் சிறப்பு புலனாய்வுக் குழு ஒன்றினை கீழ்கண்டவாறு அமைத்து அரசு ஆணையிடுகிறது:-

இந்த சிறப்பு புலனாய்வுக் குழு இரு அடுக்குகளுடன் கட்டமைக்கப்படும்.

அ) முதல் அடுக்கு சிறப்பு புலனாய்வுக் குழு

சிறப்பு புலனாய்வுக் குழுவானது ஒரு தலைவர் மற்றும் இரண்டு உறுப்பினர்களைக் கொண்டு அமைக்கப்படும்.

தலைவர்:

ஓய்வு பெற்ற மூத்த இந்திய ஆட்சிப்பணி அதிகாரி ஒருவர் சிறப்பு புலனாய்வுக் குழுவின் தலைவராக செயல்படுவார்.

முதல் உறுப்பினர்– சட்ட உறுப்பினர்:

சென்னை உயர்நீதிமன்ற மூத்த வழக்கறிஞர் (Senior Counsel) ஒருவர் குழுவின் முதல் உறுப்பினராக நியமிக்கப்படுவார். இவரது நியமனம் பகுதி நேர நியமனம் ஆகும்.

இரண்டாம் உறுப்பினர்– ஒருங்கிணைப்பாளர்

பதிவுத்துறையின் கூடுதல் பதிவுத்துறை தலைவர் நிலையில் இரண்டாம் உறுப்பினர் ஒருவர் நியமிக்கப்படுவார். பதிவுத்துறையில் தற்போதுள்ள நான்கு கூடுதல் பதிவுத்துறை தலைவர்களில் ஒருவர் இக்குழுவின் இரண்டாம் உறுப்பினர் பதவியினை கூடுதல் பொறுப்பாக வகிப்பார். இவர் இக்குழுவின் ஒருங்கிணைப்பாளராகவும் (Convenor) செயல்படுவார்.

சிறப்பு புலனாய்வுக் குழுவின் தலைவர் மற்றும் இரு உறுப்பினர்கள் பதிவுத்துறை தலைவரின் கருத்துருவின் அடிப்படையில் அரசால் நியமனம் செய்யப்படுவர்.

ஆ) இரண்டாம் அடுக்கு – நிர்வாக அலகு (Administrative Unit)

சிறப்பு புலனாய்வுக் குழுவின் செயல்பாடுகள் தங்குதடையின்றி நடைபெறவும், அன்றாட நிர்வாக மற்றும் நிதிசார்ந்த நடவடிக்கைகளை செவ்வனே நிறைவேற்றிடவும் சிறப்பு புலனாய்வுக் குழுவின் பணிகளை ஒருங்கிணைக்கவும் உறுப்பினர்களின் செயல்பாடுகளுக்கு உடனிருந்து உதவும் வகையிலும் ஒரு நிர்வாக அலகு செயல்படும்.

சிறப்பு புலனாய்வுக் குழுவின் உறுப்பினர் / ஒருங்கிணைப்பாளராக செயல்படும் கூடுதல் பதிவுத்துறை தலைவர் இந்த நிர்வாக அலகின் தலைவராவார்..இவர் இவ்வலகின் அன்றாட செயல்பாடுகளை ஒருங்கிணைத்து வழிநடத்தி புலனாய்வு குழு மற்றும் நிர்வாக அலகு ஆகியவற்றிற்கிடையேயான செயல்பாடுகளையும் ஒருங்கிணைப்பார்.

இந்நிர்வாக அலகு, மாவட்டப்பதிவாளர் நிலையில் உள்ள ஓர் அலுவலர், சார்பதிவாளர் நிலையில் உள்ள இரு அலுவலர்கள், ஐந்து உதவியாளர்கள், மூன்று தட்டச்சர்கள் மற்றும் ஒரு அலுவலக உதவியாளர் ஆகியோருடன் செயல்படும்.

மேற்படி குழுவின் அலுவலகம் ஒரு புதிய முகவரியில் தனியே உரிய வசதிகளுடன் இயங்கும் வகையில் அமைக்கப்படும்.

4. சிறப்பு புலனாய்வுக் குழுவிற்கு பரிந்துரைக்கப்படும் ஊதிய விவரம் பின்வருமாறு:–

(1) அரசாணை (நிலை) எண்.548, உள்துறை, நாள் 16.10.2019–ன் படி அமைக்கப்பட்ட நான்காவது காவலர் குழுவின் தலைவர் அவர்களுக்கு மறு பணியமைப்பு ஊதியத்தின் கீழ் (Re–deployment basis) ஊதியம் நிர்ணயிக்கப்பட்டுள்ளதன் அடிப்படையிலும் மற்றும் தமிழ்நாடு ஓய்வூதிய விதி 44ன்படியும் இக்குழுவின் தலைவருக்கு ஊதியம் மற்றும் பிற படிகள் நிர்ணயம் செய்யப்படும்.

(2) இக்குழுவின் முதல் உறுப்பினரான சட்ட உறுப்பினருக்கு குழுவின்அமர்வின் அடிப்படையில் ஊதியம் வழங்கப்படும்.

(3) இக்குழுவின் இரண்டாம் உறுப்பினர் / (ஒருங்கிணைப்பாளர்) கூடுதல் பதிவுத்துறை தலைவர் பதவியானது பதிவுத்துறையில் தற்போது பணியாற்றிவரும் கூடுதல் பதிவுத்துறை தலைவர்களில் ஒருவருக்கு கூடுதல் பொறுப்பாக வழங்கப்படுவதால் தனியே ஊதிய விவரம் குறிப்பிடும் நிலை எழவில்லை.

(4) சிறப்பு புலனாய்வுக் குழுவிற்கு (இரண்டாம் அடுக்கு நிர்வாக அலகு) தேவையான துணை பணியிடங்கள் (மாவட்டப் பதிவாளர், சார்பதிவாளர், உதவியாளர், தட்டச்சர் மற்றும் அலுவலக உதவியாளர்) தற்போதுள்ள பணியிடங்களிலிருந்து மறுபரவல் மூலம் நிரப்பப்படும். மேலும், இரண்டு ஓட்டுநர் பணியிடங்கள் முன்னாள் படைவீரர் நல வாரியம் (TEXCO) அல்லது வெளிமுகமை மூலம் நிரப்பப்பட வேண்டும்.

மேற்காணும் 4 (நான்கு) இனங்கள் தொடர்பாக பதிவுத்துறை தலைவரிடம் இருந்து கருத்துருக்கள் பெறப்பட்டு அதனடிப்படையில் அரசால் ஆணைகள் வெளியிடப்படும்.

5. மேலே பத்தி 3-ல் ஆணையிட்டுள்ளவாறு மேற்கண்டவாறு புதிதாக உருவாக்கப்படும் சிறப்பு புலனாய்வுக் குழுவிற்கு கீழ்கண்ட இனங்களுக்காக தொடரும்/தொடரா செலவினங்களுக்கான தொகை அனுமதித்து இதன் மூலம் ஆணையிடப்படுகிறது.

| வ. எண் | பொருள் | எண்ணிக்கை | ஒப்பளிப்பு செய்யப்படும் தொகை (ஆண்டிற்கு) |
|---|---|---|---|
| தொடரா செலவினம் | | | |
| 1. | சிறப்பு புலனாய்வுக்குழு தலைவர் அவர்களுக்கான சீருந்து (ஒரு Toyota Innova Crysta G Plus) | ரூ.16,11,200x1 | ரூ.16,11,200/- |
| 2. | குழு நிர்மாணிக்கும் பொருட்டு கணினி சம்பந்தப்பட்ட அடிப்படை கட்டமைப்பு | தேவைக்கேற்ப | ரூ.15,00,000/- |
| 3. | நாற்காலி, மேஜை, அலமாரி மற்றும் பிற மரச் சாமான்களுடன் கூடிய அடிப்படை கட்டமைப்பு | தேவைக்கேற்ப | ரூ.15,00,000/- |
| | கூடுதல் | | ரூ.46,11,200/- |

| தொடரும் செலவினம் | | | |
|---|---|---|---|
| 1. | எரிபொருள் சிறப்பு புலனாய்வுக்குழு தலைவரின் வாகனத்திற்கு | மாதம் 300 லிட்டர் வீதம் | அரசு நிலை ஆணை எண். 379/நிதி [உள் துறை], நாள் 29.12.2013–ன் படி |
| 2. | எரிபொருள் சிறப்பு புலனாய்வுக்குழு உறுப்பினரின் வாகனத்திற்கு | மாதம் 150 லிட்டர் வீதம் | அரசு நிலை ஆணை எண். 379/நிதி [உள் துறை], நாள் 29.12.2013–ன் படி (ஒரு வாகனத்திற்கு மட்டுமே) |
| 3. | வாகன பராமரிப்பு சிறப்பு புலனாய்வுக்குழு தலைவரின் வாகனத்திற்கு | –– | ரூ.10,000/– |
| 4. | அலுவலக கட்டட வாடகை | ரூ.1,00,000x12 (மாத வாடகை ரூ.1,00,000/–) | ரூ.12,00,000/– (பொதுப்பணித் துறையின் மதிப்பீட்டிற்கு உட்பட்டது.) |
| 5. | மின்கட்டணம் | ரூ.25,000x12 | ரூ.3,00,000/– (உள்ளபடியான செலவினத்தினை அனுமதிக்கவும்) |
| 6. | பயணப்படி சிறப்பு புலனாய்வுக்குழு தலைவருக்கு | | ரூ.10,00,000/– (வரையறுக்கப்பட்ட தகுதியின்படி அனுமதிக்கவும்.) |
| 7. | பயணப்படி சிறப்பு புலனாய்வுக்குழு உறுப்பினர்களுக்கு | | |
| 8. | பயணப்படி நிர்வாக அலகு அலுவலர்களுக்கு | | |
| 9. | கணினி எழுது பொருள் மற்றும் தொடர்புடைய செலவினம் | தேவைக்கேற்ப | ரூ.4,00,000/– |

| | | | |
|---|---|---|---|
| 10. | சிறப்பு புலனாய்வுக்குழு கூட்ட செலவு | -- | ரூ.3,00,000/- |
| 11. | அறிக்கை தயாரித்தல் செலவு | -- | ரூ.4,00,000/- |

அரசாணை (நிலை) எண்.232, உள்துறை, நாள் 15.03.2017-ன்படி சிறப்பு புலனாய்வுக் குழு தலைவரின் பயன்பாட்டுக்கான வாகனம் பதிவுத்துறை தலைவரால் கொள்முதல் செய்யப்பட வேண்டும்.

6. புதிதாக உருவாக்கப்படும் சிறப்பு புலனாய்வுக் குழுவிற்கான மேற்காணும் தொடரும்/தொடரா செலவினங்களுக்கான தொகை எந்தெந்த கணக்குத் தலைப்புகளின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும் என்பது குறித்தான ஆணைகள் பதிவுத்துறை தலைவரின் கருத்துருவின் அடிப்படையில் தனியாக வெளியிடப்படும்.

7. சிறப்பு புலனாய்வுக் குழுவின் பொறுப்புகள், பணிகள் மற்றும் செயல்பாடுகள் பின்வருமாறு:-

I) சிறப்பு புலனாய்வுக் குழுவின் பொறுப்புகளும் பணிகளும்:

கடந்த காலங்களில் பதிவுத்துறையில் பதிவு நடைமுறைகளில் நடத்தப்பட்ட கீழ்கண்ட தலைப்புகளின் கீழான முறைகேடுகள் குறித்து குறிப்பான புலனாய்வை சிறப்பு புலனாய்வுக் குழு மேற்கொள்ளும்.

(1) ஆள் மாறாட்டம், நில மோசடி மூலம் போலி ஆவணப்பதிவுகள் குறித்த புலனாய்வு:-

அயல்நாடுகள் மற்றும் பிற மாநிலங்களில் வசிக்கும் அசையா சொத்தின் உண்மையான உரிமையாளர்களை ஆள்மாறாட்டம் செய்து போலி ஆவணப் பதிவுகள் மேற்கொள்ளப்பட்ட இனங்கள், இறந்தவர்களின் பெயரிலுள்ள சொத்துக்களை அவர்களே நேரில் வந்து எழுதிக் கொடுப்பதாக ஆள்மாறாட்டம் செய்து பதிவு செய்த இனங்கள், அசல் ஆவணங்கள் தொலைந்து போனதாக, போலியாக காவல் துறையிடமிருந்து சான்றிதழ் (Non Tracable Certificate) பெற்று பிறரது சொத்தை அபகரிப்பது, போலியான, காலாவதியான, ரத்து செய்யப்பட்ட பொது அதிகார ஆவணங்கள் மூலம் தவறான வகையில் உரிமை மாற்றம் மூலம் நில அபகரிப்பு செய்வது, போலி பட்டா தயாரித்து அதனடிப்படையில் பிறரது சொத்துக்களை அபகரிப்பது, முன் ஆவணத்தைப் போல மற்றொரு ஆவணத்தை தயார் செய்து சொத்தை உண்மையான உரிமையாளர்களிடமிருந்து அபகரிப்பதோடு நிலம் வாங்குபவரிடமிருந்து கிரையத் தொகை பெற்று ஏமாற்றுவது, ஒரே சொத்தை ஒன்றுக்கு மேற்பட்டோரிடம் விற்று ஏமாற்றுவது, சொத்தின் வாரிசுதாரர் அனைவரையும் குறிப்பிடாமல் சில வாரிசுதாரர்கள் மட்டுமே சொத்தை

பங்கிட்டுக் கொண்டு பிற பங்காளர்களுக்கு சொத்து கொடுக்காமல் ஏமாற்றுவது முதலான பல்வேறு மோசடி ஆவணப்பதிவுகள் தொடர்பாக சிறப்பு புலனாய்வுக் குழு விரிவாக புலனாய்வு மேற்கொண்டு அதன் அடிப்படையில்,–

அ) தவிர்த்திருக்கப்பட வேண்டிய ஆவணப்பதிவுகள் மற்றும் ஆவணப்பதிவில் சார்பதிவாளரின் பங்கு;

ஆ) வேண்டுமென்றே ஒரே பதிவு அலுவலரால் மீண்டும் மீண்டும் ஏற்படுத்தப்பட்ட ஆவணப்பதிவுகள்;

தொடர்பான விவரங்களையும் இப்பதிவுத் தவறுகள் மீது எடுக்கப்பட வேண்டிய தொடர் நடவடிக்கைகளையும் பகுப்பாய்வு செய்து பரிந்துரைக்கும்.

(2) அரசு நிலங்கள் அபகரிப்பு செய்யப்பட்டது குறித்த புலனாய்வு:–

அரசு நிலங்கள், நீர்நிலை புறம்போக்குகள், பூமிதான இடங்கள் சுவாதீன சொத்துக்கள், இந்து சமய அறநிலையத் துறைக்கு சொந்தமான நிலங்கள், வக்ஃபு வாரியத்திற்கு சொந்தமான நிலங்கள் தொடர்பாக, கடந்த காலங்களில் நடத்தப்பட்ட முறைகேடான ஆவணப் பதிவுகள் குறித்து இக்குழு விரிவாக புலனாய்வு செய்து அதன்அடிப்படையில்,–

அ) தவிர்த்திருக்கப்பட வேண்டிய ஆவணப் பதிவுகள் மற்றும் ஆவணப்பதிவில் சார்பதிவாளரின் பங்கு;

ஆ) வேண்டுமென்றே ஒரே பதிவு அலுவலரால் மீண்டும் மீண்டும் ஏற்படுத்தப்பட்ட ஆவணப்பதிவுகள்;

தொடர்பான விவரங்களையும் இப்பதிவுத் தவறுகள் மீது எடுக்கப் பட வேண்டிய தொடர் நடவடிக்கைகளையும் பகுப்பாய்வு செய்து பரிந்துரைக்கும்.

(3) அரசுக்கு ஏற்படுத்தப்பட்ட வருவாய் இழப்புகள் குறித்த புலனாய்வு:–

கடந்த காலங்களில் பதிவு அலுவலர்களால் ஏற்படுத்தப்பட்ட அரசுக்கான வருவாய் இழப்புகள் குறித்து முழுமையான புலனாய்வு மேற்கொண்டு அதன் அடிப்படையில்,–

அ) தவிர்த்திருக்கப்பட வேண்டிய இழப்புகள் மற்றும் அதில் பதிவு அலுவலரின் பங்கு;

ஆ) வேண்டுமென்றே ஒரே பதிவு அலுவலரால் மீண்டும் மீண்டும் ஏற்படுத்தப்பட்ட வருவாய் இழப்புகள்;

குறித்த விவரங்களையும் வருவாய் இழப்புகளை வசூலிக்கவேண்டிய வழிமுறைகள் மற்றும் தொடர் நடவடிக்கைகளையும் பகுப்பாய்வு செய்து இக்குழு பரிந்துரைக்கும்;

(4) அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவுகளை பதிவு செய்வதை தவிர்த்தல் மற்றும் பதிவுச்சட்டம் பிரிவு 22A(2)–க்கு முரணாக பதிவு செய்வதைத் தவிர்த்தல் தொடர்பாக கடந்த காலங்களில் தெளிவான அரசாணைகள் மற்றும்

சுற்றறிக்கைகள் மூலம் பதிவு அலுவலர்களுக்கு முறையாக அறிவுறுத்தப்பட்ட பின்னரும் பதிவு அலுவலர்கள் அங்கீகரிக்கப்படாத மனைகளை பதிவு செய்தல் மற்றும் பதிவுச் சட்டம் பிரிவு 22A(2)–க்கு முரணாகப் பதிவு செய்தல் ஆகிய பதிவுத்தவறுகளை மேற்கொண்ட இனங்களை விரிவாக புலனாய்வு செய்து அதன் விவரங்களை அறிக்கை செய்தல் மற்றும் இவ்வினங்களில் அரசுக்கு ஏற்படுத்தப்பட்டுள்ள வருவாய் இழப்புகளைக் கண்டறிதல்,

உள்ளாட்சி அமைப்புகளுக்கு முறைப்படுத்துதல் கட்டணம் மற்றும் மேம்பாட்டுக் கட்டணம் (Regularization Fees and Development Charge) ஆகியவற்றை பொருத்து ஏற்படுத்தப்பட்ட இழப்புகளைக் கண்டறிதல்:

இவற்றின் அடிப்படையில்,

அ) தவிர்த்திருக்கப்பட வேண்டிய இனங்கள் மற்றும் இவ்வினங்களில் பதிவு அலுவலரின் பங்கு;

ஆ) வேண்டுமென்றே ஒரே பதிவு அலுவலரால் மீண்டும் மீண்டும் ஏற்படுத்தப்பட்டுள்ள இழப்புகள்;

இ) இவ்வினங்கள் தொடர்பாக இழப்புகளை வசூலிக்க வேண்டிய வழிமுறைகள் மற்றும் தொடர் நடவடிக்கை விவரங்களை இக்குழு விரிவாக பரிசீலனை செய்து பரிந்துரைக்கும்.

(5) மேலும், சிறப்பு புலனாய்வுக் குழுவின் கவனத்திற்கு வரும் பிற இனங்கள் மீது கூர்ந்தாய்வு மேற்கொள்ளப்படலாமென கருதும் நேர்வுகளில் பதிவுத்துறை தலைவர் வழி அறிக்கை அனுப்பி அரசின் அனுமதி பெற்று அவ்வினங்கள் மீதும் புலனாய்வுக் குழு கூர்ந்தாய்வு மேற்கொள்ளலாம்.

II) சிறப்பு புலனாய்வுக் குழுவின் செயல்பாடுகள்:–

மேற்படி சிறப்பு புலனாய்வுக் குழு மூன்று ஆண்டுகளுக்கு செயல்படும். இக்குழு விருப்பு வெறுப்பற்ற நடுநிலையான செயல்பாட்டினை உறுதிப்படுத்தும். தன்னிச்சையான பயண அட்டவணைகளை வகுத்து தமிழகம் முழுவதும் சுற்றுப்பயணம் மேற்கொள்ளும். கடந்த கால பதிவுத் தவறுகளால் பாதிக்கப்பட்ட பொது மக்களிடமிருந்து போலி ஆவணப் பதிவு மற்றும் நில அபகரிப்பு தொடர்பான புகார் மனுக்களை பெற்று அவற்றின் மீது புலனாய்வு பணிகளை மேற்கொள்ளும். அரசுத் துறைகளால் இக்குழுவின் கவனத்திற்கு கொண்டு வரப்படும் பதிவு தொடர்பான இனங்கள் குறித்தும் ஆய்வு மேற்கொண்டு இக் குழு அறிக்கை அளிக்கும்.

இக்குழுவானது தனது காலமுறை அறிக்கைகளை மூன்று மாதங்களுக்கு ஒருமுறை பதிவுத்துறை தலைவர் வழியாக அரசுக்கு சமர்ப்பிக்கும். கடந்த காலங்களில் நடைபெற்ற மோசடிப்பதிவுகள் மற்றும் நிலஅபகரிப்பு புகார்கள் குறித்து பரந்த அளவில் இக்குழு ஆய்வுசெய்து குறிப்பான பரிந்துரைகளை அரசுக்கும் பதிவுத்துறை தலைவருக்கும் அளிப்பதுடன் வருங்காலங்களில் இத்தவறுகளை முற்றிலும் தவிர்ப்பதற்கான

பல்வேறு சாத்தியக் கூறுகளையும் ஆய்வுசெய்து அறிக்கை அளிக்கும் வகையில் இக்குழு செயல்படும்.

மேலும், பதிவுத்துறையால் நிர்வகிக்கப்படும் பல்வேறு சட்டங்களில் உள்ள நடைமுறைச் சிக்கல்களையும், செயலாக்க இடர்பாடுகளையும் கண்டறிதல், கடந்த காலங்களில் நடந்த தவறுகளைத் தவிர்க்கும் வகையில் தற்போதைய காலகட்டத்திற்கு ஏற்ற நடைமுறைகளை மேம்படுத்துதலுக்கான முன்மொழிவுகளை தனது காலமுறை அறிக்கைகளில் இக்குழு பரிந்துரைக்கும்.

8. பதிவுத்துறை தலைவர் மற்றும் சிறப்பு புலனாய்வுக்குழு இடையிலான ஒருங்கிணைப்பு கூட்டங்கள் உரிய கால இடைவெளியில் தொடர்ந்து நடைபெறும்.

9. மேற்கண்ட நடைமுறைகளுடன் அமைக்கப்படும் சிறப்பு புலனாய்வுக் குழு மேலே கூறப்பட்டுள்ள கட்டமைப்பின் அடிப்படையிலும் வழிமுறைகளின் அடிப்படையிலும் செயல்பட அனுமதித்து அரசு அவ்வாறே ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பா. ஜோதி நிர்மலாசாமி
அரசு செயலாளர்

பெறுநர்
பதிவுத்துறை தலைவர், சென்னை – 28.
சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை, சென்னை – 9.
மாண்புமிகு அமைச்சர், வணிகவரி மற்றும் பதிவு அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 9.
வணிகவரி மற்றும் பதிவு(யு)த் துறை, சென்னை – 9.
நிதித்துறை, சென்னை–9.
அரசு செயலரின் தனிச் செயலர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர் 15/12/21
15/12/21